## 82. மனதார எங்களை மன்னிக்கும்

### பல்லவி

மனதார எங்களை மன்னிக்கும் தேவனே
முகமலர்ந்து எங்களை அனைக்கும் தேவனே

### அனுபல்லவி

*தாயிலும் மேலாய் அன்பு வைத்தீர்*
*தகப்பனிலும் மேலாய் பாசம் வைத்தீர்*

### சரணங்கள்

1. உம்மை விட்டு நான் தூரம் போனால்
எனக்காக ஏங்குபவரே
உமது வருகைக்காய் எதிர்பார்க்கிறேன்
எனக்காக என்றும் காத்திருக்கிறீர்
- மனதார

2. நாற்றத்தின் சேற்றிலே நான் இருந்தாலும்
பாவத்தின் குழியிலே கிடந்தாலும்
திருந்தி வரும்போது சேர்த்து கொள்கிறீர்
என்னை அனைத்து முத்தம் செய்கிறீர்
- மனதார

3. பாவ வஸ்திரத்தை மாற்றுகிறீர்
நீதியின் வஸ்திரத்தை உடுத்துகிறீர்
விரலிலே மோதிரத்தை போடுகிறீர்
பாதரட்சையை உடுத்துகிறீர்
- மனதார